DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.118/2025
Prosecution Witness P.W.1

Name : **திரு.நாகபாலன்**
Caste:

Father's Name :**திரு.**
Calling :

Village:
Religion :

Taluk :
Age:

3-ம் எதிரி ஆஜரில்லை, அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

**நாள்: 23.02.2026**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் கம்பம் மாலையம்மாள்புரத்தில் 4 வது வார்டில் குடியிருந்து வருகிறேன். நான் ஆக்டிங் டிரைவர் ஆக வேலை செய்து வருகிறேன். அதல்லாமல் பைனான்ஸ் தொழிலும் செய்து வருகிறேன். இறந்து போன முத்துக்குமரன் எனது உடன்பிறந்த தம்பி. அவர் டிரைவர் வேலையும், பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தார். அவருக்கு சொந்தமாக இரண்டு லாரிகள் உள்ளது. அந்த லாரிகளை எனது சகோதரர் பராமரிப்பு வந்து அதை வாடகைக்கு விட்டு தொழில் செய்து வந்தார் அது அல்லாமல் அவர் பைனான்ஸ் தொழிலும் செய்து வந்தார். அவர் மாரியம்மன் கோவில் தெரு, கம்பத்தில் குடியிருந்து வந்தார். பைபாஸ் சாலையில் லாரி தொழில் செய்து வந்தார். பைனான்ஸ் தொழிலும் அதே இடத்தில் தான் செய்து வந்தார்.

2. எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள எதிரிகளான 1ம் எதிரி சதாம் உசைன், 2-ம் எதிரி பிருந்தா தேவி 4-ம் எதிரியான ரித்திக் குமார், 3-ம் எதிரி எதிரி பெயர் ஈஸ்வரி மற்றும் எதிரி ரூபியா ஆகியோர்களை எனக்கு தெரியும்.

எனது தம்பி சுமார் 6 வருடங்களாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். எனது தம்பி மருத்துவ தேவைக்காகவோ அல்லது தனி நபர்களுக்கு கடன் கொடுப்பது வழக்கம். எனது தம்பி கடன் கொடுக்கும்போது புரோநோட்டின் பேரிலும், காசோலைகள் பேரிலும், சொத்து சம்பந்தமான அசல் பத்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டும் கடன் தருவது வழக்கம். அவ்வாறு கடன் கொடுக்கும் விபரங்களை எனது தம்பி பராமரிப்பது வழக்கம். இந்த கணக்கு வழக்குகளை எனது அம்மா விஜயலட்சுமி தான் பராமரித்து வருவார்.

3. எனது தம்பி முதலில் ஒரு நபரை திருமணம் செய்து அந்த திருமணமானது 2022 ஆம் ஆண்டு விவாகரத்தானது. அதன் பிறகு தற்போது சாட்சி–2, ரதி பிரியா என்பவரை எனது தம்பி 2023 ஆம் ஆண்டு திருமணம் செய்து அவருடன் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்தார். எனது தம்பிக்கு முதல் மனைவி மூலம் இரண்டு பிள்ளைகள் உண்டு. ஒரு பையன் எனது தம்பியையும், ஒரு பையன் முதல் மனைவியும் பராமரித்து வந்தனர். எனது தம்பியின் இரண்டாம் மனைவிக்கு குழந்தை கிடையாது. எனது தம்பி கடன் கொடுக்காத கடன் திருப்பி செலுத்தாத நபர்களை என்னிடம் அறிமுகம் செய்து வைப்பார், எனது தம்பிக்காக நான் அந்த பணத்தை வசூல் செய்து தருவேன்.

4. எனது தம்பி இல்லாத சமயங்களில் என்னை வசூல் செய்து கொள்வதற்காக அவர்களிடம் என்னை அறிமுகம் செய்து வைப்பார், அந்த வகையில் எனது தம்பி யாருக்கெல்லாம் கடன் கொடுப்பார் என்ற விவரம் எனக்கு தெரியும். 1–ம் எதிரி சதாம் உசேன் கம்பம் காலனியில் குடியிருந்து வருகிறார், அவர் டிரைவர் தொழில் செய்து வருகிறார். அவர் சொந்தமாக மாடு ஏற்றும் லாரி வைத்து தொழில் செய்து வந்தார், அந்த வகையில் அவர் எங்களுக்கு பழக்கம் அந்த வண்டிக்கு தேவையான பணம் எனது தம்பியிடம் முதல் எதிரி சதாம் உசேன் வாங்கிக் கொள்வார். அவர் வைத்திருந்த வண்டி ஒன்று கோவையில் மாடு ஏற்றி வரும்போது சிக்கிக் கொண்டது.

5. அந்த வண்டியை சுந்தரம் பைனான்ஸ் நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். எனவே அவர் வைத்திருந்த வண்டியை பணம் செலுத்தி எனது தம்பியை எடுத்து ஓட்டச் சொல்லியும் அவரிடம் 1-ம் எதிரி சதாம் உசேன் டிரைவராக வேலை செய்வதாக சொன்னார். இது நடந்தது 2023-ம் ஆண்டு, அதிலிருந்து முதல் எதிரி எனது தம்பிக்கு பழக்கம். சதாம் உசேனின் நண்பரான கௌதம் என்பவர் வண்டியும் இதே போல் பைனான்ஸ் நிறுவனத்தால் கைப்பற்றப்பட்டது.

6. அவர் புதுப்பட்டியை சேர்ந்தவர் அவரது வண்டியும் அந்த பைனான்ஸ் தொகையை செலுத்திவிட்டு வண்டியை மீட்டெடுத்தால் அந்த வண்டியும் ஓட்டலாம் என எனது தம்பியிடம் சதாம் உசேன் சொல்லியிருந்தார். எனவே இரண்டு வண்டிகளையும் எனது தம்பி மீட்டெடுத்து அவற்றை ஓட்டி வந்தார். அவரிடம் 1ம் எதிரி சதாம் உசேன் டிரைவராக 2023 ஆம் ஆண்டு முதல் எனது தம்பியிடம் பணிபுரிந்து வந்தார். 2023 ஆம் ஆண்டு 2-ம் எதிரி பிருந்தா தேவி தனது மகளான ரூபனா என்பவருக்கு திருமணம் செய்வதற்காக எனது தம்பியிடம் பணம் கேட்டிருந்தார், மொத்தம் எவ்வளவு ரூபாய் என்று எனக்குத் தெரியாது. அவரது தாயாரான 2-ம் எதிரி பிருந்தா தேவியை எனது தம்பிக்கு எனக்கும் பழக்கம்.

7. அதே 2023 -ம் ஆண்டு 1வது எதிரி சதாம் உசேன் மற்றும் 2ம் எதிரி பிருந்தாதேவி ஆகியோர் கருப்பாயி என்பவர் வீட்டின் அசல் பத்திரத்தை வைத்து என்னிடம் ரூ.6,00,000/- அதே 2023 ஆம் ஆண்டு அடமானம் வாங்கியிருந்தார் அதிலிருந்து எங்களுக்கு இரண்டாம் எதிரி பிருந்தாதேவி, ரூபனா ஆகியோர்கள் எங்களுக்கு பழக்கம். பிருந்தா மூலமாக அவரது சகோதரியான ஈஸ்வரி என்பவரை எங்களுக்கு எங்களுக்கு தெரியும், அவர் பிருந்தா தேவியின் சித்தப்பா மகள். அதே 2023-ம் ஆண்டு இந்த பணம் கொடுக்கல், வாங்கல்

தொடர்பாக பஞ்சாயத்து செய்வதற்காக ஈஸ்வரி தனது சகோதரிக்காக எங்களிடம் பேச வந்தார்.

8. 4–ம் எதிரி ரித்திக்ரோஷன் பிருந்தாவின் மகளை திருமணம் செய்வதற்காக நிச்சயிக்கப்பட்டவர், அவரும் லாரி டிரைவராக தொழில் செய்து வந்தார். 2023–ம் ஆண்டு 1வது எதிரி சதாம் உசேன், பிருந்தா தேவியான இரண்டாம் எதிரியை திருமணம் செய்துள்ளார். எப்ப ஒவ்வொரு வாரமும் மூன்று லோடுகள் மாடுகளை கேரளாவிற்கு கொல்லம், கோட்டையம் ஆகிய ஊர்களுக்கு சதாம் உசேன் ஏற்றி செல்வார், அவ்வாறு ஏற்றிச்சென்று அதற்கு பணம் அவர்கள் கொடுக்கும்போது அந்த பணத்தை தனது அக்கவுண்டில் சதாம் உசேன் வாங்கிக் கொள்வார்.

9. அவ்வாறு வாங்கி வந்த பணத்தை எனது தம்பியிடம் கணக்கு காட்டி கொடுக்க வேண்டும் ஆனால் அவ்வாறு கொடுக்காமல் இருந்து வந்துள்ளார். பணம் கொஞ்சம், கொஞ்சமாக கூடி எவ்வளவு ரூபாய் வந்ததென்று எனது இறந்து போன தம்பி முத்துக்குமரனுக்கு தான் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று தெரியும். எனது தம்பி இறப்பதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு 2ம் எதிரி பிருந்தா தேவி தனது பத்திரம் ஒன்றைக் கொண்டு வந்து எனது தம்பியிடம் கொடுத்துவிட்டு எனது தம்பிக்கு சேர வேண்டிய மொத்த தொகையும் செட்டில் செய்வதாக சொல்லியிருந்தார், இந்த விபரம் எனது தம்பி சொல்லி தெரிந்து கொண்டேன். எனக்கு இது பற்றி நேரடியாக விவரம் தெரியாது.

10. எனது தம்பிக்கு வர வேண்டிய மொத்த தொகை ரூ.35 லட்சம் மற்றும் ரூ.6 லட்சம் சேர்த்து மொத்தம் ரூ.41 லட்சம் வர வேண்டி இருந்தது என எனது தம்பி தெரியும் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். அந்த அசல் பத்திரம் மற்றும் காசோலை ஆகிய இரண்டையும் வைத்து எனது தம்பி உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் எனது தம்பி வழக்கு தாக்கல் செய்திருந்தார்,

அந்த வழக்கு பற்றி விவரங்கள் எனக்குத் தெரியாது. அந்த வழக்கை வாபஸ் வாங்க சொல்லி சதாம் உசேன் பிருந்தா மற்றும் ஈஸ்வரி மணிகண்டன் ஆகியோர்கள் மூலமாக எனது தம்பி முத்துக்குமரனுக்கு அடிக்கடி மிரட்டல்கள் வந்து கொண்டிருந்தது. அவ்வாறு போன் வந்தவுடன் எனது தம்பி என்னை அழைத்து எனக்கு தெரிவிப்பார். இதுபோல் சுமார் பத்து முறை என்னிடம் எனது தம்பி சொல்லி உள்ளார். எனது தம்பியின் போன் நம்பர் 8248 954982. எனது போன் நம்பர் 8610755108.

11. பிருந்தா தேவி கொடுத்த கருப்பாயின் அசல் பத்திரம் மட்டும் என்னிடம் உள்ளது. அதைக் கேட்டுதான் பிருந்தா தேவி என்னிடம் ஃபோன் செய்து அந்த பத்திரத்தை கொடுத்தால் வேறு இடத்தில் கடன் வாங்கி எனது தம்பியின் கடனை அடைத்து விடுவதாக தெரிவித்து வந்தார். பிருந்தாவின் பத்திரம் நீதிமன்றத்தில் இருப்பதால் அதை வாங்கி கொடுத்தால் அதையும் வைத்து கடனை அடைத்து விடுவதாக என்னிடம் தெரிவித்தார். எங்கள் வழக்கறிஞரான திரு.விக்னேஷ் குமார் என்பவரிடம் பத்திர எழுத்தர் ஜெயலட்சுமி என்பவர் பத்திரத்தை திருப்பி கொடுத்தால் வெளியில் வைத்து கடன் வாங்கி தருவதாக சொல்லியுள்ளார்கள். ரூ.20 லட்சம் கடன் வாங்கி கொடுக்க முடியும் என்று அவர்கள் இருவரும் பிருந்தா தேவியிடம் சொல்லி உள்ளார்கள்.

12. கடந்த 28.10.2024 ஆம் தேதியன்று எனது தம்பி மற்றும் அவரது மனைவியான ரதி பிரியா இருவரும் கம்பம் உழவர் சந்தை அருகில் சென்று கொண்டிருக்கும்போது 1-ம் எதிரி சதாம் உசேன் மற்றும் 2-வது எதிரி பிருந்தா தேவி இருவரும் எனது தம்பியிடம், உனது லாரியில் கஞ்சாவை போட்டு உன் மீது வழக்கு தொடுப்போம் என்றும், உன்னை கொலை செய்து விடுவோம் என்றும் எனது தம்பிக்கு எதிராக மிரட்டினார்கள். இது சம்பந்தமாக மாவட்ட காவல்துறை மற்றும் கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக ரதி பிரியா புகார் கொடுத்துள்ளார். அவர்கள் இது சம்பந்தமாக வழக்கு பதிவு

செய்தார்கள். அதல்லாமல் எனது தம்பியின் டிரைவரான திரு.கௌதம் என்பவரிடம் எதிரிகள் போன் போட்டு எனது தம்பி தொடுத்திருந்த வழக்கை வாபஸ் வாங்காமல் இருந்தால் அண்ணன், தம்பி இருவரையும் கொன்று விடுவோம் என்றும் அவனிடம் இது பற்றி சொல்லிவிடுவார்கள் என்று கௌதமிடம் போன் செய்து சொல்லி உள்ளார்கள்.

13. கடந்த 15.11.2024 ஆம் தேதியன்று பைபாஸ் ரோட்டில் இருக்கும் கார்த்திக் நம்பியார் ஒர்க்ஷாப்பில் உட்கார்ந்து முத்துக்குமரன், விக்னேஷ் குமார் வழக்கறிஞர், நான், பிருந்தா தேவி, சதாம் உசேன், பத்திர எழுத்தர் ஜெயலட்சுமி ஆகிய 6 பேரும் உட்கார்ந்து மதியம் 3:30 மணி அளவில் உட்கார்ந்து பேசினோம். அப்போது பத்திர எழுத்து ஜெயலட்சுமி அவர்கள் வழக்கறிஞர் விக்னேஷ்குமாரிடம் அசல் பத்திரம் திரும்பிக் கொடுத்தால் ரூ.20 லட்சம் லோன் போட்டு கொடுப்பதாக தெரிவித்தார். அதற்கு எனது தம்பியான முத்துக்குமரன் முழு தொகை வந்தால் தான் இருக்கும் முழு கடனை அடைக்க முடியும் என்று சொன்ன காரணத்தினால் பிருந்தா தேவி அப்போது தெரிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள், நாளைக்கு என்ன நடக்கிறது என்று பாருங்கள் என்ன சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

14. 17.11.2024 ஆம் தேதியன்று அதிகாலை 3:30 மணியளவில் வேறு வண்டியின் டிரைவரான தினேஷ் என்ற நபர் எனக்கு போன் அடித்து கீழே வருமாறு அழைத்தார். நான் வீட்டிலிருந்து கீழே வந்தவுடன் எனது தம்பி முத்துக்குமரன் கார்த்திக் நம்பியார் என்பவர் ஒர்க்ஷாப்பில் எனது தம்பி வெட்டுப்பட்டு இறந்து கிடப்பதாக சொன்னார். நான் போன் செய்து எனது தம்பி மனைவிக்கும் எனது குடும்பத்தாருக்கும் தகவல் சொல்லி அவர்களை நான் அழைத்துக் கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். கார்த்திக் நம்பியார் ஒர்க் ஷாப் என்பது கம்பம் பைபாஸ் சாலையில் அமைந்துள்ளது. அங்கு போய் நாங்கள் பார்க்கும்போது எனது தம்பி கார்த்திக் ஒர்க் ஷாப் ரத்த வெள்ளத்தில் இறந்து

கிடந்ததை பார்த்தேன். அவருக்கு இடது கை, காது, நெற்றி ஆகிய இடங்களில் காயங்கள் இருந்ததை பார்த்தேன். வயிற்றில் ஒரு குத்து என பல காயங்கள் இருந்ததை பார்த்தேன்.

15. சபரி என்பவரிடம் வேலை பார்த்து வந்த திவாகர் என்பவரிடம் நாங்கள் கேட்டபோது 16.11.2024–ம் தேதியன்று இரவு 10.30 மணியளவில் ரித்திக்ரோஷன் மற்றும் சதாம் உசேன் இருவரும் சென்றதாக சொன்னார். இரவு வசூல் வரும் என்பதால் எனது தம்பி எப்போதும் அந்த ஒர்க் ஷாப்பில் தான் தூங்குவார், அந்த ஒர்க்ஷாப் கார்த்திக் என்பவருக்கு சொந்தமானது. 17/11/2024 ஆம் தேதியன்று நள்ளிரவு 1.30 மணியா, 2.30 மணியா என்று சரியாக தெரியவில்லை. திவாகர் என்ற நபர் கன்னிச்சாமி என்பவர் டீக்கடை அருகில் 4–ம் எதிரி ரித்திக் ரோஷன் பல்சர் வாகனத்தில் சதாம் உசேனை இறக்கிவிட்டு சென்றதாகவும், தான் கண்ணால் பார்த்ததாகவும் தெரிவித்தார்.

16. சுபாஷ் என்ற ஆம்புலன்ஸ் டிரைவர் போலீசாருககு தகவல் சொன்னார். போலிசார் வந்து எனது தம்பியின் பிரேதத்தை கைப்பற்றினார்கள். அதன் பிறகு நான் உத்தமபாளையம் காவல் நிலையத்திற்கு சென்று இது சம்பந்தமாக புகார் தெரிவித்தேன். அந்தப் புகாரை பரமன் என்பவர் எழுதினார், நான் புகாரில் கையெழுத்து போட்டேன், அந்த புகார் தான் அ.சா.ஆ.1. புகார் கொடுத்துவிட்டு க.விலக்கு அரசு மருத்துவமனைக்குச் சென்று என் தம்பியின் பிரேத பரிசோதனையை முடித்த பிறகு, பிரேதத்தை வாங்கிச் சென்றோம். நான் இது சம்மந்தமாக உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தபோது சாட்சியம் அளித்துள்ளேன். என்னிடம் காண்பிக்கக்கூடிய சட்டை வேஷ்டி மற்றும் உள்ளாடை எனது தம்பியுடையது, அது சா.பொ.1, 2 மற்றும் 3. எனது தம்பியின் பாக்கெட்டில் அவர் வைத்திருந்த மொபைல் போன் இருந்தது அதை போலீசார் கைப்பற்றினார்கள் அந்த மொபைல் போன் தான் என்னிடம் காண்பிக்க கூடிய சா.பொ.4. நான் நீதித்துறை நடுவர் முன்பு

கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.2. போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள். பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பிரச்சனை மற்றும் அசல் பத்திரம் எனது தம்பி வைத்து வழக்கு தொடுத்து இருந்தார் என்ற காரணத்திற்காக இந்த சம்பவமானது நிகழ்ந்துள்ளது. போலீசார் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஏற்கனவே நான் இந்த விபரங்களை உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் முன்னிலையில் என்னை விசாரிக்கும்போது நான் சொல்லியுள்ளேன். எந்த ஆண்டு முதல் எதிரி சதாம் உசேன் லாரி ஓட்டுனராக எனது தம்பியிடம் வேலை செய்து வந்தார், எந்தெந்த ஊர்களுக்கு அவர் சரக்குகளை ஏற்றி செல்வார், பணம் எவ்வாறு கொண்டு வந்து கொடுப்பார் என்ற விவரங்களை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. புகாரில் சொல்லி உள்ளேன். பணம் கொடுக்கல், வாங்கல் சம்பந்தமாக நடந்த பிரச்சனை தொடர்பாக எனது தம்பி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். இரண்டு நபர்களுக்கும் கைகலப்பாகி கம்பம் வடக்கு காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் தரப்பட்டது. அது எந்த ஆண்டு என்று எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை, கொலை நடப்பதற்கு மூன்று நான்கு மாதங்களுக்கு முன்பு அதே ஆண்டு நடந்தது. அந்த புகார் கொடுத்த ஆவணம் தொடர்பான வழக்கு கோப்புகளை நான் போலீசாரிடம் விசாரணையின் போது கொடுத்துள்ளேன். நான் சொன்ன கார்த்தி ஒர்க் ஷாப்பில் எனது தம்பியின் லாரி நிப்பாட்டி வைத்திருப்போம் என்றால் சரிதான். நான் லாரி வைத்திருக்கவில்லை. கார்த்திக் உடன் எனது தம்பி பைனான்ஸ் ஒப்பந்தம் லாரி நிற்பதற்கு எதுவும் போடவில்லை.

3. நான் கூறுவது போல் அந்த இடத்தில் பைனான்ஸ் நடந்திருந்தாலும், லாரி நிறுத்திருந்தாலும் அது சம்பந்தமாக ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி இருப்பார்கள்

என்றால் சரியல்ல,அவ்வாறு இல்லாததால் தான் ஒப்பந்தம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல அந்த இடம் பொத்தம் பொதுவாக தான் நாங்கள் அலுவலகமாக பயன்படுத்திக் கொள்வோம். தனிப்பட்ட வகையில் அலுவலகம் எனது தம்பிக்கு அந்த இடத்தில் கிடையாது. அந்த லாரி ஷெட்டை ஒட்டி மாடுகள் எப்போதும் 20–30 லாரிகளில் மாடுகள் கட்டிப்போட்டு இருப்பார்கள் என்றால் சரிதான்.

4. அந்த ஒர்க் ஷாப்பில் ஒட்டி பெயிண்ட் அடிக்கும் வொர்க் ஷாப்பும் உள்ளது என்றால் சரிதான்.. அங்கும் இரவு பணி செய்வதற்கு ஆட்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். அதை ஒட்டி ஒரு டீக்கடை உள்ளது என்றால் சரிதான் அங்கும் டீக்கடையின் இரவு காவலாளி டீக்கடையின் ஓனரின் அப்பாவே இருப்பார் என்றால் சரிதான். அந்த டீக்கடையின் உரிமையாளரின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. எங்கள் ஒர்க் ஷாப்பிற்கும், சபரி மாடு கட்டும் பொட்டிலுக்கும் இடையில் சுமார் 10 மீட்டர் தூரம் தான் இருக்கும் என்றால் சரிதான்.

5. அந்த கொட்டகையிலும் ஒரு காவலாளி இருப்பார் என்றால் சரிதான். எங்கள் ஒர்க் ஷாப்க்கு கிழக்கு புறம் அண்ணாதுரை மாடு கட்டும் கொட்டகை உள்ளது என்றால் சரிதான். அங்கும் மாடு கட்டும் கொட்டகை உள்ளது என்றால் சரிதான். அந்த கொட்டகையிலும் காவலாளி இருப்பார் என்றால் சரிதான். அதேபோல் எங்கள் ஒர்க்ஷாப்பிற்கு எதிரில் ரத்தினம் என்பவர் பெட்டிக்கடை வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் கொடுத்த புகாரில் எந்த கம்பெனியில் சதாம் உசேன் பைனான்ஸ் வாங்கினார் என்றும், எந்த கம்பெனி மூலம் அந்த லாரியை எடுத்துக் கொண்டார்கள் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

6. உண்மையிலேயே அவ்வாறு பைனான்ஸ் வாங்கி இருந்தால் அது சம்பந்தப்பட்ட ஆவணங்களை எனது விசாரணையில் போலீசாரிடம் கொடுத்து

இருப்போம் என்றால் சரியல்ல. சம்பவம் சம்பந்தமாக தினேஷ் என்னை வந்து அணுகி சொல்லும்போது காலை 04.00 மணி இருக்குமா என்றால் 3.00 மணி இருக்கும். யார் சொல்லி அவருக்கு அந்த தகவல் தெரிந்தது என்ற விவரம் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கூறுவது போல் தினேஷ் என்னை அழைதது விபரம் ஏதும சொல்லவில்லை என்றும், அவ்வாறு அழைத்திருந்தால் அது பற்றிய விபரம் சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல.

7. வழக்கமாக எனது தம்பி மாலை 5.00 மணிக்கு பைனான்ஸ் வசூல் செய்வது சம்பந்தமாகவும் மாடு தொழில் சம்பந்தமாகவும் வெளியில் கிளம்பி செல்வார் என்றால் சரிதான். அவ்வாறு அவர் சென்றவர் வீட்டிற்கு 12.00 – 1.00 மணிக்கு தான் திரும்பி வருவார் என்றால் சரியல்ல, செட்டில் தான் இருப்பார். எனது தம்பிக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். அந்த செட்டில் வழக்கமாக 4–5 நபர்கள் சேர்ந்து எனது தம்பி உடன் மது அருந்துவார்கள் என்றால் சரிதான்.

8. சம்பவம் நடந்ததற்கு முதல் நாள் எனது தம்பியை நான் எப்போது பார்த்தேன் என்ற விவரத்தை புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சதாம் உசேன்னின் லாரியானது எந்த வருடம் பைனான்ஸ் நிறுவனத்தில் கைப்பற்றினார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 2019 ம் ஆண்டே அந்த வண்டியை பைனான்ஸ் நிறுவனம் கைப்பற்றினார்கள் என்றும், சதாம் உசேன் சொல்லித்தான் அவரது வண்டி சீஸ் ஆன விபரமே எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9. எதிரிகள் 2 மற்றும் 3 எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், சாட்சி தற்போது தனக்கு நேரடியாக தெரியும் என தெரிவிக்கிறார். 2023 ஆம் ஆண்டிலிருந்து எனக்கு அவர்களை நேரடியாக தெரியும். இரண்டாம் எதிரி பிருந்தாவின் தந்தை பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது இரண்டாம்

எதிரி ஊத்துப்பட்டியில் பெருமாள் என்பவருக்கு மனைவியாக இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

10. அவருக்கு இரண்டு வயதுக்கு வந்த பெண் குழந்தைகள் உள்ளார்கள் என்றும், அங்கு அவர் வாழ்ந்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிருந்தாவுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஒரே ஒரு ஆண் மகன் உள்ளார். இரண்டாம் எதிரியும், மூன்றாம் எதிரியும் பெண் பார்த்தது சம்பந்தம் பேசிக் கொண்ட வகையில் தான் தெரிந்தவர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இரண்டாம் எதிரி மற்றும் மூன்றாம் எதிரி சகோதரிகள் என்று நான் சொன்னது தவறு என்றும், அவர்கள் சம்பந்தம் பேசிக் கொண்ட வகையில் தெரிந்தவர்கள் என்றால் சரியல்ல.

11. 3ம் எதிரி ஈஸ்வரி ஆர்.ஆர். நகரில் குடியிருந்து வருகிறார். துர்க்கை அம்மன் கோயில் மேற்கு புறம் அவர் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல, இரண்டும் ஒரே பகுதி தான். அந்த பகுதி ஆர்.ஆர் என்று தான் சொல்வார்கள். கணவன் இறந்ததால் அவரது அப்பாவின் பாதுகாப்பில் துர்க்கை அம்மன் கோயில் தெருவில் 3ஆம் எதிரி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் ஆர்.ஆர் நகரில் குடியிருக்க வில்லை என்றால் சரியல்ல, ஆர்.ஆர் நகரில் தான் துர்க்கை அம்மன் கோயில் அமைந்துள்ளது. சதாம் உசேன் எவ்வளவு பணம் வாங்கினார் எவ்வளவு வட்டி செலுத்தி உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் வட்டி எதுவும் செலுத்தவில்லை.

12. எந்தெந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தார் என்னென்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். டைரி போட்டு இது சம்பந்தமாக எழுதி வைக்கப்பட்டுள்ளது. அந்த டைரி போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. உண்மையாக இருந்திருந்தால் அந்த கணக்கு வழக்கு நோட்டுப் புத்தகத்தை போலீசாரிடம் ஒப்படைத்திருப்போம்

என்றால் சரியல்ல. 2ம் எதிரி என்ன சொத்து சம்பந்தமான ஆவணம் எனது தம்பியிடம் கொடுத்தார் அது என்ன வகையான ஆவணம் என்ற விவரம் எனக்கு தெரியாது, வழக்கறிஞருக்கு தான் தெரியும் எங்கு வைத்து அந்த ஆவணம் கொடுக்கப்பட்டது என்ற விபரமும் தெரியாது என்றால் சரிதான்.

13. தனது அம்மாவின் மருத்துவ செலவுக்காக லோன் சம்பந்தமாக அந்த ஆவணம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தம்பிக்கு ஜெயலட்சுமி என்ற பத்திர எழுத்தர் நல்ல பழக்கம் என்றால் சரிதான். பல பெண்களுக்கு எனது தம்பி லோன் வாங்கி கொடுப்பதில் ஈடுபட்டு வந்தார் என்றும், அந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. 2-ம் எதிரி ஆவணத்தை வாங்கி எனது தம்பி ஜெயலட்சுமி என்பவரிடம் கொடுத்து போலியான பத்திரம், வாரிசு சான்றிதழ் அடிப்படையில் எனது தம்பியால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, போலியான ஆதார் கார்டு, போலியான பத்திரம் மூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

14. 2ம் எதிரி தனது சொந்த அப்பாவின் பத்திரத்தை முத்துக்குமாரிடம் கொடுத்திருந்தார் என்றும், ஜெயலட்சுமியிடம் அதை கொடுத்து விசாரித்துவிட்டு வாரிசு சான்றிதழ் இரண்டாம் எதிரி பெயருக்கு வாங்கினால் மட்டுமே கடன் கொடுக்க முடியும் என எனது தம்பி தெரிவித்தார் என்றால் சரியல்ல, நான் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. ஜெயலக்ஷ்மி 2 மற்றும் 3 எதிரிகள் கடனுக்காக அணுகும்போதும் கலப்பு திருமணம் செய்து கொண்டால் ரூ.20 லிருந்து ரூ.30 லட்சம் ரூபாய் வரை கடன் பெற்று தருவதாக சொல்லியிருந்தார் என்றும் அதற்கு போலியாக ஆதார் அட்டை மற்றும் வாரிசு சான்றிதழ் பெறவேண்டும் என தெரிவித்திருந்தார் என்றால் சரியல்ல.

15. 1ம் எதிரியின் சதாம் உசேனின் பெயரை 2-ம் எதிரி உடன் சேர்த்து ஒரு ஆதாரத்தை போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல்

மூன்றாவது ஈஸ்வரி என்பவரது பெயரை 2–ம் எதிரியின் அக்காவாக காட்டி ஒரு வாரிசு சான்றிதழ் போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதேபோல் 3–ம் எதிரி சொத்தை தானம் கொடுத்தது போல் 2–ம் எதிரி பெயருக்கு பத்திரம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இவை அனைத்தும் இறந்து போன எனது தம்பி முத்துக்குமார் மற்றும் பத்திர எழுத்தர் ஜெயலட்சுமி ஆகியோர்கள் ரூ.5 லட்சம் கமிஷனுக்காக செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் பிருந்தா தேவியின் சகோதரர் மற்றும் அம்மா பெயர் அந்த பத்திரத்தில் மறைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

16. அந்த பத்திரத்தை கொடுத்தபோது பிருந்தாதேவி பெயருக்கு பத்திரம் மாற்ற வேண்டும் என்றால் நிறைய செலவாகும் என்றும் அந்த செலவுத் தொகையை தான் ஏற்றுக் கொள்வதாக சொல்லி அந்த செலவுக்கு ஈடாகத்தான் காசோலை மற்றும் அசல் பத்திரத்தை எனது தம்பி வாங்கிக் கொண்டார் என்றால் சரியல்ல. அவ்வாறு வாங்கியிருந்தால் பிருந்தா பெயருக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டு லோனுக்காக மாற்றப்படும் போது முத்துக்குமார் மற்றும் ஜெயலட்சுமி ரூ.5 லட்சம் கமிஷன் பத்தாது என்றும், 25 லட்ச ரூபாய் வாங்கினால் ரூ.7 லட்சம் தங்களுக்கு கமிஷன் கொடுக்க வேண்டும் என தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல.

17. அதேபோல் 1ம் எதிரிக்கு சம்பளத்தில் ஒரு லட்ச ரூபாய் வரவு செலவு கழித்துக் கொள்வதாகவும், கணவர் என்ற வகையில் 2–ம் எதிரிக்கு வந்து பத்திரத்தில் கையெழுத்து போட்டு தர வேண்டும் என எனது தம்பி சொல்லி இருந்தார் என்றால் சரியல்ல. இரண்டாவது லோன் வேண்டாம் என்றும், செலவழித்த பணத்தை சிறுக, சிறுக தந்து விடுவதாகவும் பத்திரத்தை திருப்பித் தருமாறு கேட்டு இருந்தார் என்றால் சரியல்ல. லோன் சம்பந்தமாக பிரச்சனை நடந்ததாக நான் கொடுத்த புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

18. நான் இது சம்பந்தமாக எதிலும் தலையிடவில்லை என்றும், எனது தம்பியின் வரவு செலவு கணக்குகள் எனக்கு தெரியாது என்றும், நான் டிரைவர் பணி செய்து வருவதாக வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. இதன் காரணமாகத்தான் அந்த காசோலையை வைத்து மோசடியாக ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தம்பி வார வட்டி, மீட்டர் வட்டி ஆகிய அடிப்படையில் பணம் பல நபர்களுக்கு கொடுத்து வம்பு வழக்குகளிலும் பிரச்சனைகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார் என்றால் சரியல்ல.

19. எனது புகாரில் 2-ம் எதிரி ரூ.4 லட்சம் வாங்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. போலீஸ் விசாரணையில் 1 மற்றும் 2-ம் எதிரி இருவரும் சேர்ந்து ரூ.41 லட்சம் எனது தம்பிக்கு பணம் கொடுக்க வேண்டும் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையிலேயே வரவு, செலவு கணக்குகள் இருந்திருந்தால் அது சம்பந்தப்பட்ட விபரங்களை முறையாக புகாரில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. ரூ.41 லட்ச ரூபாய் நான் சொன்ன தொகை எந்த தேதியில் எங்கு வைத்து எந்த ஆவணத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டது என்ற விபரம் எனக்கு குறிப்பிட்ட தெரியாது என்றால் சரியல்ல.

20. ரூ.41 லட்சம் பணமானது வெவ்வேறு தேதிகளில் கொடுக்கப்பட்டது கொடுக்கப்பட்டது. டைரியை பார்த்து தான் அந்த தொகைகள் எப்போது கொடுக்கப்பட்டதென்ற விவரம் சொல்ல முடியும். எனது தம்பி சொல்லித்தான் அந்தப் பணம் கொடுக்கல் வரவு, செலவுகள் தெரியும் என்றால் சரிதான். சந்தைக்குச் செல்லும் பொழுது எனது தம்பியிடம் 1ம் எதிரி வந்து பிரச்சனை செய்தார் என்று நான் சொல்லும் நிகழ்வு சந்தையில் 100 – 200 பேர் எப்போதும் கூட்டமாக இருப்பார்கள் என்றால் சரிதான்.

21. நான் காவல் எனது தம்பி மனைவியுடன் சென்று இருந்தேன். எனது தம்பி மனைவி தான் அந்தப் புகாரை எழுதினார், அந்த புகாரில் எனது தம்பி மனைவி எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டு இருந்தார் என்றால் ரூ.41 லட்சம் கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டு இருந்தார். ரூ.35 லட்சம் எனது தம்பி 2-ம் எதிரிக்கு தனிப்பட்ட வகையில் கொடுத்ததாகவும், ரூ.10 லட்சம் எனது தம்பியின் மனைவி 1-ம் எதிரிக்கு கொடுத்ததாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

22. புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விசாரணையில் காவல் நிலையத்தில் ஆவணங்கள் கொடுத்த விபரத்தை வாய்மொழியாக சொல்லியுள்ளேன், ஆவணங்கள் கொடுக்கவிலை. எனது தம்பி மனைவி முதலில் கொடுத்த புகாரில்ல் விசாரணையின் போது மேல் நடவடிக்கை வேண்டாம் என எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, அவ்வாறு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வழக்குக்காக நான் இல்லை என பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

23. தனிப்பட்ட முறையில் நான் ரூ.6 லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருக்கும் விவரத்திற்கான ஆவணங்கள் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது புகாரில் நானும் ரூ.6 லட்சம் பணம் கொடுத்து இருக்கிறேன் என்ற விபரத்தை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் வைத்து எங்கு வைத்து பணம் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்குக்காக நான் பணம் கொடுத்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. முன்பகை சம்பந்தமாக முதலில் கொடுத்த புகாரில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரியல்ல.

24. முதல் எதிரி காவல் நிலையத்தில் ஆஜரானபோது பணத்தை செட்டில் செய்து விடுவதாக எழுதிக் கொடுத்திருந்தார் தான் தனிப்பட்ட வழியில் வாங்கிய ரூ.3,50,000/- செட்டில் செய்வதாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் 1ம் எதிரியும், 2ம் எதிரியும் பண வரவு, செலவு ஏதுவும் வாங்கவில்லை என்றும், லோனுக்காக கொடுக்கப்பட்ட பத்திரத்தை அபகரித்து கமிஷன் தொகைக்கு ஆசைப்பட்டு என் தம்பி செயல்பட்டு வந்தார் என்றால் சரியல்ல. இதே போல் பல நபர்களிடம் எனது தம்பி செயல்பட்டு பகையை வளர்த்துள்ளார் என்றால் சரியல்ல.

25. சம்பவத்தை குறித்து என்னிடம் தினேஷ் தான் சொன்னார் என்று அவரது கைபேசி எண்ணை குறிப்பிட்டு நான் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். ரதி பிரியாவிடம் நான் தகவல் சொன்னபோது இரவு 10.15 மணிக்கு தான் வீட்டை விட்டு கிளம்பி சென்றார் என்ற விவரத்தை என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். 10.15 மணிக்கு அவர் வீட்டில் இருந்திருந்தால் அவர் ஒர்க்ஷாப்பில் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சதாம் உசேன் எந்த முகவரியில் இருக்கிறார் அவரது அப்பா பெயர் என்னவென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

26. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை சம்பவ இடத்திலும், காவல் நிலையத்திலும் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவயிடத்தில் எனது பெயர் முகவரி, தம்பியின் பெயர் முகவரி மட்டும் கேட்டு எழுதிக் கொண்டார்கள் என்றால் சரிதான். தனிப்பட்ட முறையில் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் வாங்கிக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல. ஆய்வாளர் தான் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்து வாக்குமூலம் வாங்கிக் கொண்டார். அன்றைய தினம் என்னை மட்டும் தான் விசாரணை செய்தார்களா என்றால் எல்லோரையும் விசாரணை செய்தார்கள்.

27. நான் சொன்ன இடத்தில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்பவம் சம்பந்தமாக நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல.

**4–ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

28. நான் சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் நான் சொன்ன நபர் 1ம் எதிரியை வாகனத்தில் அழைத்துச் செல்லவில்லை என்றால் சரியல்ல. சபரிநாதன் செட்டில் ரோட்டை பார்த்தவாறு ஒரு சிசிடிவி கேமராவும், மாட்டு கொட்டகை பார்த்தவாறு ஒரு சிசிடிவி கேமராவும் உள்ளது என்றால் நான் அதை பார்க்கவில்லை. அங்கு கேமராக்கள் உள்ளது என்றும் வழக்குக்காக பொய்யாக இல்லை என்று நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல, நான் பார்க்கவில்லை என்று தான் குறிப்பிடுகிறேன்.

29. கோம்பை ரோடு ஜங்ஷனில் வெளிச்சம் எதுவும் கிடையாது என்றால் சரியல்ல, வெளிச்சம் உள்ளது. கம்பம் பைபாஸ் சாலையில் கீழ் வழியாக திரும்பி கம்பத்திற்குள் வரும்போது பாண்டியன் ஹோட்டல் மற்றும் பாரத் பெட்ரோல் பங்க்,, இந்தியன் பெட்ரோல் பங்க், ஆர்.எம்.டி.சி டிப்போ ஆகியவற்றை கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த இடங்களில் வழியில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

30. கன்னிச்சாமி டீ கடைக்கு வடக்கு புறம் மெயின் ரோட்டில் பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஹெச்டிஎஃப்சி பேங்க் வங்கியும், அதன் ஏடிஎம் உள்ளது என்றால் சரிதான். பாதுகாப்புக்காக வங்கிகளும் ஏ.டி.எம்–களிலும் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழியாக போகும் நபர்கள் அந்த கேமராவில் பதிவாகும் என்றால் சரிதான். கன்னிச்சாமி கடை முக்கிலும், கே.கே.பட்டி முக்கிலும் வருபவர்களை கண்காணிப்பதற்காக சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால்

சரிதான். அந்த கேமராவிலும் வருபவர்கள், போவார்கள் விவரம் பதிவாகும் என்றால் சரிதான்.

31. கம்பம் வடக்கு காவல் நிலையத்திலும் கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூபனா 18 வயது பூர்த்தியாகாத மைனர் என்றால் சரிதான். வயது பூர்த்தி அடையாத நபருடன் நிச்சயம் நடந்ததாக என்னிடம் பொய்யாக சொல்லியுள்ளார்கள். சாட்சி திவாகர் என்னிடம் சொன்னது போல் 1ம் எதிரியை நான் சொன்ன நபர் இறக்கிவிடவில்லை என்றால் சரியல்ல. சதாசிவம் என்பவரது நிலத்திற்கு ஓரமாகத்தான் அவரது இடத்தில் தான் இந்த ஒர்க் ஷாப் மற்றும் கடைகள் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த ஒர்க் ஷாப்பிற்கு தனியாக மின்சார இணைப்பு கிடையாது என்றால் சரிதான். மின்சார இணைப்பு இல்லாத இடத்தில் எனது தம்பி வசூல் செய்வதற்காக அங்கேயே தூங்கினார் என்றும், அங்கேயே தங்கி இருந்தார் என கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் 1 முதல் 3 தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

32. திவாகரன் எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். எனது அப்பாவுடன் உடன் பிறந்த தம்பி மகன். நான் சொல்ல சொல்ல புகார் எழுதப்பட்டது.

**<u>மறுவிசாரணை - இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.23 19:23:55 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.